விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 தை 12 வெள்ளிக்கிழமை (26.01.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 38

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## கடற்படை முகாம் மீது மன்னாரில் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் தென்பகுதி கடற்பரப்பில் தாழ்வுப்பாடு கரையோரத்தில் அமைந்துள்ள கடற்படை முகாம் பகுதியில் நேற்றுக் காலை தாக்குதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக தகவல் மையம் குறிப்பிட்டுள்ளது.

நேற்றுக் காலை 5.45 மணியளவில் மீனவர்களுக்கு மீன்பிடி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நேரத்தில் இரண்டு படகுகளில் சென்ற தமிழீழ விடுதலைப்புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் இதில் படைச்சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகவும் தேசிய (04 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக்கட்சி-ஐ.தே.க.ஒப்பந்தம் தொடர்ந்து அமுல்படுத்த வேண்டும்

### நோர்வே கருத்து

(கொழும்பு)

அரசுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தமும் அது தொடர்பான பேச்சுக்களும் ஆக்கபூர்வமானவை. அது தொடர வேண்டும் என நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஜோன் வெஸ்ற்பேர்க் கூறியுள்ளார்.

இரு பிரதான கட்சிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுக்கள் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்க உதவும். அதுவே இனப்பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வுக்கான அடித்தளமாக அமையும். நாங்கள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி–மங்கள இன்று முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் அவரின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிற்கும் இடையில் இன்று சந்திப்பு நடைபெறவுள்ளது. இச் சந்திப்பு மகிந்தவினதும் மங்களவினதும் நண்பர்களின் முயற்சியினாலேயே ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இச் சந்திப்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ.டலஸ் அழகப்பெருமா,ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்து (04 ஆம் பக்கம் பார்க்க)

# உயர் பாதுகாப்பு வலய பிரதேசத்தில் மீளக்குடியமர நிபந்தனைகள் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உயர்பாதுகாப்பு வலயமாகவுள்ள 36 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை மீளக்குடிய மர்த்துவதற்கு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு உதவ ஐ.நா.தீர்மானம்

(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கி வரும் உதவிகளை அதிகரிக்க ஐக்கிய நாடுகள் உணவுத்திட்டம் தீர்மானித்துள்ளது. இதன் அடிப்படையில் இந்த வருடம் இலங்கைக்கு வழங்கும் உதவிகளை அதிகரிக்கவுள்ளதாக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து அரசை விலகக்கோரி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்பாட்டில் இருந்து அரசாங்கம் விலகிக் கொள்ளவேண்டும் எனக் கோரி தேசிய தொழிலாளர் மத்திய நிலையம் ஆர்ப்பாட்டங்களை நடாத்தவுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி நாட்டிலுள்ள அனைத்து அரசாங்க பணிமனைகளிலும் இந்த ஆர்ப்பாட்டங்களை நடாத்தவுள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க (04 ஆம் பக்கம் பார்க்க)

## திருட்டுக்களை கட்டுப்படுத்த விசேட பொலிஸ் குழு நியமனம்

### 24 மணிநேரமும் முறையிட வசதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துவரும் கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட பொலிஸ்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ்.குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் அதிகாரி செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

இந்த கொள்ளைச் சம்பவத்தை கட்டுப்ப

கொள்ளைச் சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யும் வகையில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் 24 மணி நேர சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொள்ளைச் சம்பவம் தொடர்பாக 222 2233, 222 2221, 222 2222, 118,119 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக தெரிவிக்குமாறு அறிவித்ததுடன் பொலிஸார்

## பூசாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 33 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 33 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களிடம் நடத்தப்பட்ட தீவிரவிசாரணையின் பின்னர் நிரபராதிகளாக காணப்பட்ட 33 பேரும் கொழும்பு பிரதம மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டபோது அவர்களை நீதிவான் விடுவித்துள்ளார்.

விடுவிக்கப்பட்டவர்களில் பெண்களும் அடங்குகின்றனர். பூசா தடுப்பு முகாமில் 108 ஆண்கள்,8 பெண்கள் என 116 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் இவர்களில் 33 பேர் நேற்று விடுவிக்கப்பட்டதுடன் அடுத்த மாதம் 8ஆம் திகதி 43 பேரை விடுவிப்பதாக உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும்,

எஞ்சியோரும் குற்றவாளிகள்அல்லாத மற்றவர் யாவரும் மிகவிரைவில் விடுக்கப்படுவார்கள் எனவும் கூறப்படுகின்றது. பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் அவர்களுடைய முயற்சியினாலும் அதேபோல் தம்மிடம் தொடர்பு கொண்ட (04 ஆம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் மூன்று கோவிலடிப் பகுதியில் நேற்று தீயினால் எரியுண்ட நிலையில் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இணுவில் கிழக்கைச் சேர்ந்த நாகேந்திரம் அருமைதாசன் (வயது 32) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வீட்டிலிருந்து வெளியில் சென்றவர் வீடு திரும்பவில்லையென உறவினர் தேடிச்சென்ற போது குறித்த இளைஞனின் மோட்டார் சைக்கிள் இணுவில் இளந்தாரி கோயிலடியில் அநாதரவான நிலையில் நின்றமையை கண்டுள்ளனர்.

தொடர்ந்து தேடிச்சென்றபோது உரும்பிராய் பிள்ளையார் கோயிலடியில் உடல் எரியுண்ட நிலையில் சடலமாக அவர் மீட்கப்பட்டார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்திய யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினரிடம் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-3,5)

(ராமேஸ்வரம்)

ராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற விசைப்படகை இலங்கை மீனவர்கள் வெடிகுண்டு வீசித் தாக்கி கடலில் மூழ்கடித்துள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன. அப் படகில் சென்ற மீனவர்கள் 4 பேர் மற்றொரு படகு மூலம் கரை திரும்பினர்.

ராமேஸ்வரத்தில் இருந்து புதன்கிழமை அதிகாலை 620 க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன் துறை அனுமதிபெற்று கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றன. தங்கச்சிமடத்தைச் சேர்ந்த பெஞ்சுகிளாஸ் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் மீனவர்கள் நால்வர் கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக அப் பகுதிக்கு வந்த இலங்கை மீனவர்கள் ராமேஸ்வரம் மீனவர்களின் படகின் மீது வெடிகுண்டுகளைவீசினர். இதனால் படகு சேதமடைந்து நடுக் கடலில் மூழ்கியது. (04 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.நகரை அண்மித்த பகுதியில் 13 வீடுகளில் ஒரே இரவில் திருட்டு

## நீதிவானின் வீட்டிலும் திருட்டு முயற்சி!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை அண்மித்த பகுதிகளில் உள்ள 13 வீடுகளில் நேற்று முன்தினமிரவு கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. யாழ்.நாவலர் வீதியில் உள்ள எட்டு வீடுகளிலும் நாவாந்துறையில் ஐந்து வீடுகளிலுமே இத் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

நாவலர் வீதியில் உள்ள வீடொன்றினுள் நுழைந்த திருடர்கள் அந்த வீட்டில் நின்ற நாயை வெட்டிக்கொன்றதுடன் வீட்டில் இருந்த ஒருவரையும் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர்.

எனினும் களவு தொடர்பான விபரங்களை அவர்கள் வெளியிடவில்லை. இச் சம்பவங்கள் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டதாகத் (04 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் இளைஞன் நேற்று சுட்டுக்கொலை

(மன்னார்)

மன்னார் சிறுநாவல்குளம் பகுதியில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இளைஞன் ஒருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த நபர் இராணுவ முகாமிற்கு அருகில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய போது படையினர் நிற்குமாறு உத்தரவிட்டதாகவும் அதனை (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இல. பிரச்சினை குறித்து கருத்தாய்வுக் கூட்டம்

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியத் தலைவர்கள் இணைந்த கருத்தாய்வுக் கூட்டத்தினை நடத்த வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் தமிழகச் சட்டப் பேரவை உறுப்பினர் ஆ.தமிழரசு யோசனை ஒன்றை முன்வைத்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண உதவும்வகையில் கருத்தாய்வுக் கூட்டத்தை நடத்தலாம். அதில் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, முதல்வர் கருணாநிதி, பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார்.

சட்டப் பேரவையில் ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பங்கேற்று பேசிய போதே அவர் இவ்வாறு கூறினார். (ச)

# கல்விக் கல்லூரி கற்கைநெறிகளை முடித்த 14 பேருக்கு நேர்முகத் தேர்வு

கல்விக் கல்லூரி கற்கை நெறிகளை முடித்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கென 14 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களை தேவையான ஆவணங்களின் போட்டோப் பிரதிகளுடன் சமுகமளிக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களின் விபரம் வருமாறு,

வி.விஜிதா(செம்பியன்பற்று), எஸ்.சத்தியபாமா (அல்லாரை, கொடிகாமம்), ரி.அனோஜா(நெடுந்தீவு, கிழக்கு), கே.கிரிஜா(மாவிட்டபுரம்), ஏ.ரஞ்சிதவாணி(இயற்றாலை, வரணி), சி.சிவகௌரி (ஏழாலை தெற்கு, சுன்னாகம்),

வி.பிரமிளா(தும்பளை, பருத்தித்துறை), கே.சிவகௌரி(அரசடி வீதி, திருநெல்வேலி), கே.ஜசிந்தன்(ஆனைக்கோட்டை), எஸ்.நந்தகுமார்(உப்பாவில் வீதி, வட்டு.மேற்கு), த.ஸ்ரீபிரகாஷ் (சிவன்கோவிலடி, சுன்னாகம்), ஜே.ஜொனி சசிதரன்(குருநகர்),எஸ்.சிவவதனி (கைதடி, நுணாவில்), பி.யசிதரன் (அல்லாரை வடக்கு, மீசாலை). (ச)

# வட.-கிழக்கில் கடத்தல், கொலைகள் அதிகரிப்பு சமாதானத்துக்கான காரணிகளும் புறக்கணிப்பு

## கூட்டமைப்பு எம்.பிக்கள் எடுத்துரைப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கான சகல விதமான அடிப்படைக் காரணிகளையும்அரசாங்கம் புறக்கணித்துச் செயற்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் அமெரிக்க, பிரிட்டன் தூதுவர்களிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

மகிந்த சிந்தனையின் அடிப்படையில் அரசு செயற்படுவதனால் யுத்த நிறுத்த உடன்படிக்கை செயலிழந்து விட்டதாகவும் கூட்டமைப்பு எம்.பிக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓபிளக், பிரித்தானியத் தூதுவர் ஆகியோரை கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இடம்பெற்ற சந்திப்பில் யாழ்.மாவட்ட எம்.பிக்களான மாவை.சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்புத் தொடர்பாக எம்.பிக்கள் தெரிவித்ததாவது,

யுத்தநிறுத்த உடன்படிக்கை செயலிழப்பதற்கு அரசின் நடவடிக்கைகளே காரணம். விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களை இராணுவத்தினர் கைப்பற்றுவதன் மூலம் சமாதானப் பேச்சுக்கான சூழ்நிலையை அரசு முற்றாக புறக்கணிப்பதாகவே கருத முடிகின்றது.

நோர்வேயின் அனுசரணைப் பணியையும் அரசாங்கம் புறக்கணிக்கின்றது. வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தமிழ் இளைஞர்கள் காணாமல் போகின்றனர். கடத்தப்படுகின்றனர். இதற்கு இராணுவமே பொறுப்பு.

அவர்களின் உதவியுடன்தான் கடத்தல்கள் இடம்பெறுகின்றன. அத்துடன் தினமும் இளைஞர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

கொழும்பிலும் கொழும்பின் புற நகர்ப் பகுதிகளிலும் தமிழ் இளைஞர்கள் காணாமல் போகின்றனர், கடத்தப்படுகின்றனர். நாட்டின் எந்தப் பகுதிகளிலும் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை.

மனித உரிமை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எதிரான முறையில் தென்பகுதியில் இனவாதக் கருத்துக்களை அரசாங்க அமைச்சர்கள் மக்கள் மத்தியில் கூறி வருகின்றனர்.

தமிழ், சிங்கள மக்களிடையேயான இன உறவு விரிசல் அடையும் வகையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. யாழ்ப்பாணத்தில் உணவுகளுக்கும் மருந்துப் பொருள்களுக்கும் பெருந்தட்டுப்பாடு நிலவுகின்றது.

ஏ-9பாதை மூடப்பட்டுள்ளதால் அங்கு பெரும் மனித அவலம் ஏற்பட்டுள்ளது. தென்பகுதி அரசியல் கட்சிகளிடையே முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. இதுவும் இனப் பிரச்சினைக்கான தீர்வுக்குரிய சாதகமான நிலைமைகளை தோற்றுவிக்காது .

ஆகவே சர்வதேச நாடுகள் எமது விடயத்தில் நேரடியாகக் கவனம் செலுத்த வேண்டும் என எடுத்துக் கூறியதாகத் தெரிவித்தனர்.

அதற்குப் பதிலளித்த மேற்படி ராஜதந்திரிகள் இந்த நிலைமைகள் தொடர்பாக சர்வதேச நாடுகள் கவனம் செலுத்தி வருவதாகக் கூறினர் என்றும் எம்.பிக்கள் தெரிவித்தனர். (ச)

# போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டது

இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் 2க்கு ஊழியர்களை இணைத்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அநுர எதிரசிங்க தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சை நாளையும் நாளை மறுதினமும்கொழும்பில் நடைபெறவிருந்தது. எனினும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பரீட்சார்த்திகளின் போக்குவரத்து அசௌகரியங்களைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அநுர எதிரசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ச-3)

# பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் காலை 10 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில்நடைபெறும் இக் கூட்டத்திற்கு அனைத்து அங்கத்தவர்களையும் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

# ஆயுர்வேத மருத்துவர்களுக்கான வினைத்திறமைகாண் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியாக ஆயுர்வேத மருத்துவர்களுக்கான வினைதிறமை காண் தடை தாண்டல் பரீட்சை நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கொழும்பில் நடைபெறவுள்ள இப் பரீட்சை யாழ்ப்பாணப் பரீட்சார்த்திகளின் நலன் கருதி வேம்படி மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப் பரீட்சைக்கான பரீட்சார்த்திகளின் அனுமதியட்டைகள் யாழ்.அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளதாக கூறப்படுகின்றது.

போக்குவரத்துச் சிரமங்கள் காரணமாகவே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (ச-3)

# மீளாய்வுப் பெறுபேறுகள் கிடைக்காததால் வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதில் தாமதம்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதில் கால தாமதம் ஏற்படுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் மீளாய்வு செய்யப்பட்ட இஸட் புள்ளிகள் பரீட்சைகள் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப் பெறாததன் காரணமாக வெட்டுப் புள்ளிகளை வெளியிடுவதற்கான பணிகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீளாய்வுப் பெறுபேறுகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப் புள்ளிகளை இரண்டு வாரத்துள் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் மார்ச் மாதமளவில் மாணவர்களை கற்கைப் பீடங்களுக்கு உள்வாங்குவதற்கான ஏற்பாடுகளை பல்கலைக்கழகங்கள் மேற்கொண்டு வருவதாகவும் இவ்வருடம் 14 தேசிய பல்கலைக்கழகங்களுக்கும் 5 கல்வி நிறுவனங்களுக்குமாக 18 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-1)

# தெஹிவளையில் 11 பேர் கைது

தெஹிவளையில் நடத்தப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்தின் பேரில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாக கல்கிசை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் என்று ஆரம்பவிசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.கைது செய்யப்பட்டவர்கள் 25 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர்.

நேற்று முன்தினம் முதல் நேற்று அதிகாலை வரை இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-9)

# வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு பிரத்தியேக ஆணைக்குழுக்கள்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு இரண்டு மாகாண அரச சேவை ஆணைக் குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன. இதனை மாகாண ஆளுநர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இவ்விரு மாகாணங்களும் ஒன்றாகக் காணப்பட்ட போது அரச சேவை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒரு அரச சேவை ஆணைக்குழுவே செயற்பட்டது.

எனினும் இரண்டு மாகாணங்களினதும் இணைப்பு சட்டவிரோதமானது என்ற நீதிமன்றத் தீர்ப்பையடுத்து ஒவ்வொரு மாகாணத்திற்கும் பிரத்தியேக மாகாண ஆளுநர்களை நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த அரச சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்திற்கு மாகாண ஆளுநரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டு இருந்தபோது கணக்காளர் குழுவொன்று அரச சேவை ஆணைக்குழுவிற்கு எதிராக தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு நேற்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த விடயம் தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# சாவகச்சேரியில் 6 பேரைக் காணவில்லை

சாவகச்சேரியில் 6பேரைக் காணவில்லை என யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.இதில் ஒருபிள்ளையின் தந்தையும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. கடந்த செவ்வாய்கிழமை முதல் அவர்களைக் காணவில்லை என முறையிடப்பட்டுள்ளது. (ச-5)

# கிளிநொச்சி மருத்துவமனையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

## வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மருத்துவமனையில் மருந்துப் பொருள்களுக்கான தட்டுப்பாடு தொடர்ச்சியாக நிலவிவருவதாக கிளிநொச்சி மருத்துவமனையின் பணிப்பாளர் இரத்தினம் சதானந்தம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொது மருத்துவமனையின் நிலைவரம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

போர்ச் சூழல் உருவான பின்னர் எமது மருத்துவமனையில் மருந்துத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இம்மருந்துத் தட்டுப்பாடு தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு கடிதங் கள் அனுப்பியும் எமக்குரிய மருந்துகள் முழுமையாக வந்து சேரவில்லை.

கிளிநொச்சி பொது மருத்துவமனையை நம்பி கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, மன்னாரின் இருபிரதேச செயலகப் பிரிவுகளில் வாழ்கின்ற மக்கள் உள்ளனர்.

எமது மருத்துவமனையில் ஏற்படும் மருந்துத் தட்டுப்பாடு தொடர்பாக கிளிநொச்சிப் பிரதி மாகாணச் சுகாதாரப் பணிமனையின் முக்கிய அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு ஒரு அமைதியான சூழலில் போக்குவரத்துக்கள் இலகுவாக இடம்பெற்ற காலங்களில் மருந்துக்கள் எமக்கு தேவைக்கேற்ப வகையில் கிடைத்தன.

ஆனால் தற்போது ஏற்பட்டிருக்கின்ற சூழல் காரணமாக மருந்துப் பொருள்கள் மருத்துவமனைகளுக்கு கிடைப்பதில் நெருக்கடிகள் உள்ளன என்றார் அவர். (ச)

ஏந்த நாட்டில் ஆள்வோருக்கு அதிகமாக ஆளவேண்டுமென்ற இச்சைவெறி ஏற்படுகின்றதோ அங்கு ஒரே குழப்பந்தான் உண்டாகும்.

—பிளேட்டோ

வலம்புரி

# பதவி மோகத்தில் உழலும் இலங்கை அரசியல்

பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கொடுக்க வேண்டும். அமைச்சுப் பதவிகளை வழங்கி ஜே.வி.பியினரை அரசின் பக்கம் இழுக்க வேண்டும். இதுவே இலங்கையின் சமகால அரசியல் நிலைமையாகும்.

பதவி மோகத்தில் உழலும் இலங்கையின் அரசியல் கலாசாரத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வில்லை என்பது வெளிப்படை.

இனப்பிரச்சினையை அரசியலாக்கி தமிழ் மக்களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி அரசியல் பிழைப்பை நடத்தியவர்கள் நாட்டைக் குட்டிச் சுவராக்கினார்கள். இனவாதம், வன்முறை, யுத்தம் என்ற பல்வேறு பரிணாமங்களில் இனப்பிரச்சினையைக் கையாண்டவர்களுக்குச் சமாதான வழிமுறைகளுக்குத் தெரியாமலே போயிற்று.

இலங்கை பௌத்த நாடு. இது சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானது. இங்கு தமிழர்கள் வந்தேறுகுடிகள் என்றெல்லாம் தேர்தல் பிரசாரம் செய்தவர்களுக்கே அதிகளவு வாக்குகளும் கிடைத்தன.

இலங்கை மண்ணில் எல்லா இன மக்களும் சமஉரிமை பெற்று வாழ வேண்டுமெனக் கூறிய, நியாயம் உணர்ந்த சிங்களக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ அரசியல் அமைப்பு முறைமை அறிமுகமாகும் வரை பாராளுமன்றத்தின் வாசலுக்கே செல்லமுடியாமல் போயிற்று.

உண்மையை - நியாயத்தை - சமாதானத்தை எடுத்துரைக்கக் கூடியவர்கள் பாராளுமன்றத்திற்குச் செல்ல முடியாத காரணத்தினால் உண்மை, நீதி, சமத்துவம் ஒலிக்க வேண்டிய பாராளுமன்றத்தில் இனவாதமும், இன வன்முறைகளைத் தூண்டும் வகையிலான ஆவேச உரைகளுமே இடம்பெற்றிருந்தன.

வீடெரிக்கும் இராசாவுக்கு நெருப்புக் கொடுக்கும் மந்திரிகள் போல இலங்கையின் நாடாளுமன்றம் இருந்தது.

இனப்பிரச்சினைக்கான தீர்வை அகிம்சை வழியில் பெற முடியாதென்ற நிலையில் தமிழர்கள் ஆயுதம் ஏந்திய போது சிங்கள மக்களிடையே மனமாற்றம் ஏற்பட்டது.

தமிழர்களின் விடுதலைப்போராட்டம் தமது இருப்பிற்கு அச்சுறுத்தல் தரக் கூடியதென்பதால் அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதே அந்த மனமாற்றமாகும்.

இது சிங்கள மக்களின் ஒரு சாராரிடையே ஏற்பட்டபோது இனவாத அரசியல்வாதிகள் தமது அரசியல் பிழைப்பை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டனர்.

அதுவே சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்ற பிரசாரமாகும்.

தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென விசுவாசமாக விரும்பிய சிங்கள மக்கள் சமாதானத்தை விரும்புவதாகக் கூறியவர்களை அரியணை ஏற வைத்தனர்.

சமாதான வழியில் தீர்வு காணப்படும் என்ற புதிய பிரசாரம் மக்களை ஏமாற்றுதற்கான என்பதை உரியவர்களே அறிவார்கள் அன்றி, மக்கள் அவற்றை நம்பி ஏமாந்தனர்.

'சமாதானம்' என முழக்கமிட்டவர்கள் பதவிக்கு வந்ததும் தாம் கூறியதையே மறந்து யுத்தத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். அவர்களின் யுத்த ஏற்பாடு தமிழ் மக்களைப் பூண்டோடு அழிக்கும் நோக்குடையதாயினும், அது சாத்தியமற்றுப்போக இப்போது பிரிந்து கிடக்கும் சிங்களக் கட்சிகளை ஒன்று சேர்க்கும் நாடகம் மேடை ஏறியிருக்கின்றது.

இதில் முக்கியமான பாத்திரங்களுக்கான போட்டி நடக்கிறதே தவிர, இனப்பிரச்சினை பற்றி எதுவுமே அக்கறை கிடையாது என்பதே உண்மை.

# வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்க அரசாங்கம் நடவடிக்கை

வன் செயல்கள் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடுகளை வழங்குவதற்கு மீள்குடியேற்ற அமைச்சு நடவடிக்கைகளினை மேற்கொண்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகிந்த சிந்தனையினை வலுவூட்டும் வகையில் ஜாதிக சிவய வேலைத்திட்டத்திற்கு அமைய இந்த நட்டஈடு வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1983ஆம் ஆண்டிற்குப் பின்னரான காலப் பகுதியில் நாட்டில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக மரணமடைந்த மற்றும் காயமடைந்தவர்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளன.

இதற்கென 26 மில்லியன் ரூபாவை அமைச்சு ஒதுக்கியுள்ளது. அமைச்சின் கீழுள்ள புனர்வாழ்வு அதிகார சபையின் ஊடாக இந்த நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அத்துடன் காயப்பட்டவர்களுக்கு அவர்களின் மருத்துவ அறிக்கைக்கு அமைய நட்டஈடு வழங்கப்படவுள்ளது. அமைச்சர் ரிசாத் பதுதீன் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நட்டஈட்டுக் கொடுப்பனவை வழங்கியுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-3)

# பொருள் விற்பனையின் போது பற்றுச்சீட்டு வழங்க வேண்டும்

## யாழ்.நீதிவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள அனைத்து வியாபார நிலையங்களிலும் பொருள்கள் விற்பனை செய்யும்போது நுகர்வோருக்குப் பற்றுச் சீட்டு வழங்க வேண்டுமென யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

நல்லூர் பிரதேச சபையினால் தமது பிரிவுக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் சில வரி செலுத்தவில்லை என குறிப்பிட்டு யாழ்.மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிவான் இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் குடாநாட்டின் அனைத்து வியாபார நிலையங்களிலும் விலைப்பட்டியல் காட்சிக்கு வைக்கப்படுவதுடன் நுகர்வோருக்குப் பற்றுச்சீட்டும் வழங்கப்பட வேண்டுமெனவும் நீதிவான் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

இவ் உத்தரவுக்கு அமைய அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள வர்த்தக நிலையங்களில் கிராம சேவையாளர், விலைக் கட்டுப்பாட்டுச் சபை கண்காணித்து பிரதேச செயலர் ஊடாக அறிக்கை தயாரித்து எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் நீதிவான் அறிவுறுத்தியுள்ளார்.

அனைத்து வர்த்தக நிலையங்களும் அரச அதிபரினால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கு மேலாக பொருள்களை விற்பனை செய்ய முடியாது எனவும் யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (ச-5)

# விசாரணைக்குச் சமுகமளிக்குமாறு யாழ்.அரச அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்திலுள்ள 36 கிராம சேவையாளர் பிரிவுகளையும் சேர்ந்த மக்களை விசாரணைக்குச் சமுகமளிக்குமாறு யாழ்.அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். முன்னர் விசாரணைகளுக்குச் சமுகமளித்தவர்கள் மீண்டும் செல்லத் தேவையில்லை எனவும் அவர் கூறியுள்ளார். அரச அதிபரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட 36 கிராம சேவையாளர் பிரிவுகளில் ஏற்கனவே நிரந்தரமாக வசித்த குடும்பங்களை மீளக் குடியேற்றம் செய்வது தொடர்பாக அம்மக்களைச் சந்தித்து விசாரணைகளை நடாத்தி அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஆகையினால் உச்ச நீதிமன்றத்தின் கட்டளைகளுக்கமைவாக இதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி உயர் பாதுகாப்பு வலயத்தைச் சேர்ந்த கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தற்போது தங்கியிருக்கும் பிரதேச செயலகங்களில் அல்லது அண்மையிலுள்ள பிரதேச செயலகங்களில் இதற்கான விசாரணைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி தெல்லிப்பழை , சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், சாவகச்சேரி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை ஆகிய பிரிவுகளில் விசாரணைகள் நடத்தப்படும். யாழ்.மாவட்டத்திற்கு வெளியே வேறு மாவட்டங்களில் தங்கியிருக்கும் மேற்படி உயர் பாதுகாப்பு வலயத்தைச் சேர்ந்த குடும்பங்கள் தமது விபரங்களை 20.02.2007ற்கு முன்னதாக தெல்லிப்பழை பிரதேசசெயலருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ச)

# திருகோணமலைச் சிங்கள மக்கள் திரும்பவும் மீளக்குடியமருகின்றனர்

அண்மைக்கால மோதல்களை அடுத்து திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெயர்ந்த சிங்கள மக்கள் தற்போது தமது இருப்பிடங்களுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

வாகரை மற்றும் வெருகல் போன்ற இடங்களில் இருந்து விடுதலைப்புலிகளால் இராணுவ நிலைகள் மீது முன்னர் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் எறிகணைகள் சில இந்தச் சிங்களக் கிராமங்களில் பொதுமக்கள் நிலைகள் மீது விழுந்ததையடுத்து இவர்கள் இடம்பெயர்ந்திருந்தனர்.

ஆனால் தற்போது வாகரை மற்றும் வெருகல் ஆகியவை இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டதையடுத்து இந்தச் சிங்கள மக்கள் தமது இருப்பிடங்களுக்குச் செல்லலாம் என்று பாதுகாப்பு மற்றும் சிவில் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இதனை அடுத்தே சேருவில, மகிந்தபுர, கல்லாறு மற்றும் சிறிமங்களபுர ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ)

# வெள்ளி நற்சிந்தனை

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

இன்று எம்முடைய எதிர்காலம் பற்றிய ஒரு அச்சம் ஏற்பட்டுள்ளது. நேற்று, இன்று, நாளை எனத் திட்டமிட்டு வாழ்ந்த நிலை ஒன்று முன்னர் இருந்தது. கடந்த காலச் செயற்பாடுகள் பயனுள்ளவையாக நிறைவேற நிகழ்காலச் செயற்பாடுகள் இனிதே நகர வருங்காலம் வளமாய் அமையும் என்ற நம்பிக்கை நிலைத்திருந்தது. இத்தகைய காலங்களின் கணிப்புச் செல்நெறியைப் பயிற்றக் கல்வி துணை நின்றது. கல்வியின் பயன் இம்மைக்கும் மறுமைக்கும் வழித்துணையாய் வரும் என்பர். எனவே முதலில் அது இம்மையில் எப்படி எம்மை வழி நடத்தும் என்பதை நாலடியில் சுருங்கச் சொல்லி விளங்க வைத்த முன்னோர் கூற்றை மீள நினைவூட்டுகிறோம்.

கல்விச் செல்வம் பொருட் செல்வத்தைப் போன்றதல்ல. பொருட்செல்வம் கையில் உள்ளபோது மட்டுமே பயன்படும். ஆனால் கல்வியோ கொடுக்கக் கொடுக்கக் குறையாத செல்வம். பொருளோ கொடுத்தால் குறைவுபடும். கல்விச்செல்வம் கேடு செய்யவிடாது. நல்லது செய்ய ஆற்றுப்படுத்தும் இந்த உலகம் பற்றிய மயக்கத்தைத் தெளிவுபடுத்தும் நல்ல மருந்து கல்வி. அது உடல், உள,ஊனங்களைப் போக்கி எல்லோரையும் நலமாக்கும். சிறப்பாக மனத்திலே மயக்கம் ஏற்படும் வேளைகளில் இந்தக் கல்வி என்னும் மருந்து உடனடியாகத் தெளிவை ஏற்படுத்தி மீண்டும் ஊக்கத்தோடு உடலையும் உள்ளத்தையும் இயங்க வைக்கும்.

மனிதனுக்கு உறுதுணையாக நிற்கும் கல்வியைக் கொடுப்பது மிகச் சிறந்த கொடையாகும். சிறிய உயிர்கள் என்றும் எடுத்துச் செல்லக்கூடிய பாரமற்ற நிலையான கொடையும் இதுவே. கற்றவர் தம்மை அழகு செய்யவேண்டிய அவசியமே இல்லை. வேறு அணிகலன்கள் அணியாமல் 'கல்வி' என்னும் அணிகலன் பூண்டு வலம் வருவதே பெருஞ் சிறப்பாகும். எழுத்தின் வனப்பே உண்மையான வனப்பாகும். இதனால் எண்ணும் எழுத்தும் கண்ணெனப்பட்டன.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

நெஞ்சத்தில் நல்லவர்களாக நடுவு நிலையாளராக சொல்வணப்புடையராக என்றும் உள்ளத்தில் இளமையோடு உலகை வலம் வருவதற்குக் கல்விக் கொடையைச் செய்வோம். எமது அடுத்த தலைமுறை எம் பெயர் சொல்லி இக் கொடையைத் தொடர இது வழிகாட்டும். கல்வியின் சிறப்பு எம்முடைய இன்றைய வாழ்வியலில் நன்கு உணரப்பட வேண்டும். நாலடியார் இக்கருத்தை நாளாந்த நடைமுறையால் எளிமையாக எடுத்து விளக்கியதை மனங்கொளத் தருகிறோம்.

*'களர் நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்*
*விளை நிலத்து நெல்லின் விழுமிதாகக் கொள்வர்*
*கடை நிலத்தோர் ஆயினுங் கற்றறிந்தோரை*
*தலைநிலத்து வைக்கப்படும்'* (நாலடியார்: 133)

# இலங்கை விவகாரத்தில் தலையிடுவதற்கு எந்த நாட்டையும் அனுமதிக்கக்கூடாது

## ஜே.வி.பி.கோரிக்கை

இந்தியா,அமெரிக்கா உட்பட எந்தவொரு நாடும் இலங்கை விவகாரத்தில் தலையிடுவதற்கு அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

இனப்பிரச்சினை தொடர்பாக எந்தவொரு நாட்டிடமும் அரசாங்கம் எத்தகைய ஆலோசனைகளையும் பெறவேண்டிய அவசியமில்லை என்று ஜே.வி.பியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினை விடயத்திலும் பேச்சுவார்த்தை தொடர்பிலும் தலையிடுவதற்கு வெளிநாடுகளுக்கு எத்தகைய அருகதையும் இல்லை. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு தற்போது நாட்டில் எந்த வேலையும் இல்லை.

கட்டுநாயக்காவில் உள்ள ஹோட்டலில் தங்கியுள்ள கண்காணிப்புக் குழுவினர் அப்படியே தமது நாடுகளுக்கு சென்றுவிடவேண்டும் என்றும் அவர் கூறினார். இவ் விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது;

அந் நாட்டின் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் வெளிநாடுகளின் தலையீட்டை எக்காரணம் கொண்டும் ஏற்கமுடியாது. எனவே எந்தவிதமான வெளிநாட்டு தலையீட்டையும் எமது நாட்டில் அனுமதிக்கக்கூடாது.

இது தொடர்பாக அரசாங்கம் உறுதியான முடிபை எடுக்கவேண்டும். பிரச்சினை தீர்வு விடயம் தொடர்பாக வெளிநாடுகளிடம் அரசாங்கம் எந்தவிமான ஆலோசனைகளையும் பெறக்கூடாது என கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் தெரிவித்தார்.

அதேவேளை இனப்பிரச்சினை தீர்வு விடயத்திலும் பேச்சுவார்த்தை விடயத்திலும் தலையிட எந்த நாட்டுக்கும் அரசாங்கம் அனுமதி வழங்கக்கூடாது. இந்தியா மற்றும் அமெரிக்கா உட்பட எந்தவொரு நாட்டுக்கும் எமது நாட்டின் உள்விவகாரத்தில் தலையிட அனுமதி வழங்கக்கூடாது.ஆலோசனையும் பெறக்கூடாது.

இதேவேளை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற வேண்டும். வீணாக இலங்கையில் காலத்தைக் கடத்தாமல் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் தமது சொந்த நாடுகளுக்கு சென்று விடவேண்டும்.அண்மைக்காலமாக கண்காணிப்புக்குழு விடுதலைப்புலிகளுக்கு பக்கச்சார்பாகவே நடந்துகொள்கிறது என்றார். (எ-5)

# தேசிய அரசாங்கத்தை அமைக்கும் நோக்கம் ஐ.தே.கவுக்கு இல்லை

## கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைக்கும் நோக்கம் ஐக்கிய தேசியக்கட்சிக்கு இல்லை. தேசிய அரசாங்கம் குறித்த யோசனை அரசாங்கத்தரப்பில் இருந்தே ஐக்கிய தேசியக்கட்சிக்கு வரவேண்டும் என்று கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து கட்சி மாறுபவர்களை இணைந்த குழுஒன்றை அமைப்பதற்கான முயற் சிகள் இடம் பெறுகின்றன என்று வெளிவரும் தகவல்கள் குறித்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ் விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது; தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் யோசனை தற்போதைய நிலையில் அரசாங்கத்திற்கு இல்லை. காரணம் அரசாங்கம் ஸ்திரமாகவுள்ளது.

அத்துடன் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக்கட்சியும் இரண்டு வருடங்களுக்கு அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க உறுதியளித்துள்ளது.

அதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் சில உறுப்பினர்கள் எமது திட்டங்களை ஏற்றுக்கொண்டு எம்முடன் இணைந்து செயற்பட இணக்கம் தெரிவித்து வருகின்றனர்.

நாட்டில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயம் இடம் பெறப்போகும் இந்த சந்தர்ப்பத்தை குழப்புவதற்கே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கின்றார் என்று தெரிகின்றது.

இதுவரை காலமும் வராத தேசிய அரசாங்கம் தொடர்பான எண்ணம் தற்போது ஏன் வரவேண்டும் என்று கேட்கின்றேன்.

இந் நிலையில் அவற்றுக்கான ஒரு விடயத்தை ஏற்றுக்கொள்ள எமது அரசாங்கம் தயாராக இல்லை என்பதனை திட்டவட்டமாக தெரிவிக்கின்றேன் என்றார். (ச)

## கடற்படை...

பாதுகாப்பு ஊடக தகவல் மையம் குறிப்பிட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த கடற்படைச் சிப்பாய் மன்னார் இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். கடற்படையினர் பதில் தாக்குதலை நடத்தியதில் விடுதலைப்புலிகள் பின்வாங்கிச் சென்றதாக பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ச-9)

## இலங்கைக்கு...

இலங்கையில் தற்போதைய சூழ்நிலையில் மனிதநேய ஸ்தாபனங்கள் கடந்த வருடத்தைவிட இந்த வருடம் உதவிகளை அதிகரிக்கும் தேவை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு சபை துரித நிவாரணப் பணிகளையும் ஆரம்பித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-9)

## ஜனாதிபதி...

கொள்ளவுள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து அரசுக்கு கட்சி தாவுவோ ருக்கு அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு ஏதுவாக அரசில் உள்ள அமைச்சர்கள் தலா ஒரு பொறுப்புக்களை வைத்துக் கொண்டு மற்றைய பொறுப்பை விட்டுத்தரவேண்டுமென ஜனாதிபதி தனது அமைச்சர்களிடம் கேட்டதைத் தொடர்ந்து மகிந்தவுடனான மங்களவின் மோதல் உச்சக்கட்டத்தை அடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## சுதந்திரக்கட்சி...

ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகி றோம். அதாவது, நாங்கள் தீர்வைக் கொண்டுவர முடியாது.

இரு தரப்பையும் ஒரு உடன்பாட்டிற்கு கொண்டு வரவே எங்களால் முடியும். தீர்வை எட்டுவது அவர்களைப் பொறுத்தது. சர்வதேசத்தின் கருத்தும் அதுவே. விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவு மிக வும் வருந்தத்தக்கது. விடுதலைப்புலிகளுடனான தொடர்புக ளை இது கடினமாக்கியுள்ளது. அமைதி முயற்சிக்கு இதுவும் ஒரு பின்னடைவு தான் என்றார்.

இலங்கையில் பாதுகாப்பு நிலைமைகள் மோசமடைந் துள்ளதால் கண்கா ணிப்புக் குழுவினரால் பணியாற்றமுடியா துள்ளது. எனவே தமது பாதுகாப்புக்கு மாற்று ஒழுங்குகளை மேற்கொள்வதற்காகவே அவர்களின் பணிகள் தடைப்பட் டுள்ளது.

இனப்பிரச்சினையின் தீர்வுக்கு இந்தியாவின் உதவியும் அதன் புரிந்துணர்வும் அவசியம். ஆனால் அது இலங்கை அரசைப் பொறுத்தது. அவர்கள் இது தொடர்பாக என்ன செய்ய வேண்டும் என முடிபெடுக்கட்டும். எமது செயற்பாடு களை விடுதலைப் புலிகளுக்கு தெரியப்படுத்தும்படி அரசு எம்மை ஆரம்பத்திலிருந்தே கேட்டிருந்தது.

நாம் தொடர்ந்து இந்தியாவுடன் கருத்துக்களைப் பகிர்ந்து வந்துள்ளோம். இந்தியாவும் எம்மை ஊக்கப்படுத்தியுள்ளது. 2003இல் ஏற்படுத்தப்பட்ட டோக்கியோப் பிரகடனம் இலங் கை அரசின் புனரமைப்புப் பணிகளுக்கு நிதி வழங்குவதற்கே ஈடுபடுத்தப்பட்டது.

எனினும் போர் நிறுத்தம் முறையாக நடைமுறைப்படுத்த முடியாதபோது இந்த புனரமைப்புப் பணிகளை நடைமுறைப் படுத்த முடியாது என்றார் அவர். (ச)

# "ஞானச்சுடர்" இன்று வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மாதம் தோறும் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' ஆன்மீகச் சஞ்சிகையின் ஜனவரி மாத வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் வெளியிடப்படும்.

இம் மலரின் வெளியீட்டுரையை செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனும் ,மதிப்பீட்டுரையை வல்வை சிவகுருவித்தியாலய அதிபர் ஆ.சிவநாதனும் வழங்கவுள்ளனர். (எ-35)

## மன்னாரில்...

அவர் பொருட்படுத்தாத நிலையில் அவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகவும் தேசியபாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரி வித்துள்ளது.

இந் நிலையில் இவரது சடலம் அடையாளம் காண்பதற்காக மன்னார் பொதுவைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-3,9)

## யாழ்.நகரை...

தெரிவிக்கப்பட்டது.

வீடுகளில் இருந்த தொலைபேசிகள் துண்டிக்கப்பட்ட பின்னரே இத் திருட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டதால் உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு முறையிட முடியாமல் போனதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை சாவகச்சேரி மாவட்ட நீதிவான் அ.பிறேம்சங்கர் வீட்டினுள் நேற்றிரவு கள்வர் புகுந்துள்ளனர். நல்லூர் செட்டித்தெரு வீதியில் உள்ள அவரது வீட்டினுள் நேற்றிரவு 8.30 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அப் பகுதியில் நாய்கள் குலைக்கும் சத்தம் அதிகமாகக் கேட்டதையடுத்து நீதிவான் வெளியே வந்து பார்த்ததாகவும் அவ்வேளை திருடன் ஒருவன் அவரது வளவினுள் நின்று தப்பியோடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து நீதிவானால் பொலிஸ், இராணுவம் மற்றும் யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் தேடுதலை மேற்கொள்ளப்பட்டபோதும் திருடர்களைப் பிடிக்கமுடியவில்லை எனவும் கூறப்பட்டது.

இதேவேளை அப் பகுதிக்கு வந்த வெள்ளை வான் ஒன்றிலிருந்து நால்வர் இறங்கியதாகவும் நாய்கள் அதிகமாகக் குலைத்ததால் அவ் வான் அவ்விடத்திலிருந்து விலகிச்சென்றதாகவும் அப் பகுதி மக்கள் நீதிவானிடம் தெரிவித்துள்ளனர். (ச-3,5)

## இந்திய...

இதனையடுத்து படகிலிருந்த மீனவர்கள் 4 பேரும் கடலில் குதித்துத் தத்தளித்து கொண்டிருந்தபோது அப் பகுதியில் மற்றொரு படகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் அவர்களைக் காப்பாற்றி கரைசேர்த்தனர் என இந்தியச் செய்திகள் தெரிவித்தன. (ச-5)

## பூசாவில்...

வர்களுடைய தகவல்களை வைத்துக் கொண்டு நாங்கள் அவர்களை விடுதலை செய்துள்ளோம் என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரன் தெரிவித்தார்.

அதே போல் எதிர்காலத்தில் பொலிஸ் நிலையங்களில் தடுப்புக் காவலில் வைத்து பூஜாவிற்கு அனுப்பாமல் பொலிஸ் நிலையங்களில் பெற்றோரின் கையெழுத்தோடு விடுதலை செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி கொடுக்கவேண்டும் எனக் கோரியிருக்கின்றோம் என அவர் கூறினார். (ச-3)

## போர்நிறுத்த...

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை நாட்டை மீட்டெடுக்க அவசியம் என அவர் குறிப்பிட்டார். எனினும் தேசிய தொழிலாளர் மத்திய நிலையத்தின் கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற் சங்கமான வேதன மீளமைப்பு சங்கம் நிராகரித்துள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தமது உறுப்பினர்கள் பங்கேற்ற மாட்டார்கள் என அந்த சங்கம் அறிவித்துள்ளது. (ச-3)

# உயர் பாதுகாப்பு வலய பிரதேசத்தில்...

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக 36 கிராம சேவையாளர் பிரிவு சம்பந்தமான உயர்பாதுகாப்பு வலய அடிப்படை மனித உரிமை சம்பந்தமான வழக்கின் உச்ச நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள 36 கிராம சேவையாளர் பிரிவினுள் நிரந்தரமாக வதிந்த குடும்பங்களை மீள்குடியேற்றம் செய்வது சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை கலந்து ஆலோசித்து அறிக்கை ஒன்று சமர்ப்பிக்குமாறு உச்ச நீதிமன்றம் கட்டளை விதித்துள்ளது.

இக் கட்டளையின் பிரகாரம் மீள் குடியேற்றம் செய்வதற்கான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார். விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் வருமாறு;

❖ மீள்குடியேற விரும்புபவர்கள் மாவட்ட செயலாளர் பாதுகாப்புப் படைகளின் பிரதிநிகளுடனான நேர்முகம் ஒன்றுக்கு சமுகமளித்து தங்களுடைய அடையாளம், தங்களது காணிக்குரிய உரித்து ஆவணம் மற்றும் ஏனைய தொடர்புடைய விபரங்களை சமர்ப்பித்தல்வேண்டும்.

❖ அவர்கள் ஒன்று சேர்ந்து பிரஜைகள் குழு ஒன்றை அமைத்து அதன் மூலம் எவ்வித ஆயுத அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளினால் பாதுகாப்புத் தரப்பினருக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படாது என்ற உத்தரவாதத்தினை அளித்தல் வேண்டும்.

❖ மீள் குடியேறும் நபர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத் திற்கமைவாக விவசாய நடவடிக்கைகளில் அல்லது வேறு நடவடிக்கைகளில் ஈடுபடலாம்.

❖ அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலவச உலர் உணவுகளை கோர இயலாது.

மீள் குடியேற்றம் செய்வதற்காக, இளவாலை வடக்கு,இளவாலை வடமேற்கு, வித்தகபுரம், பன்னாலை, கொல்லன்கலட்டி ,நகுலேஸ்வரம், தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை, துர்க்காபுரம், தந்தை செல்வாபுரம் ,

மாவட்டபுரம், மாவிட்டபுரம் தெற்கு, காங்கேசன்துறை மேற்கு , காங்கேசன்துறை மத்தி, காங்கேசன்துறை தெற்கு,பளை வீமன்காமம் வடக்கு, பளை வீமன்காமம் தெற்கு, கட்டுவன், கட்டுவன் மேற்கு, தென்மயிலை, வறுத்தலைவிளான், குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிழக்கு, வசாவிளான் கிழக்கு, வசாவிளான் மேற்கு, மயிலிட்டி வடக்கு, தையிட்டி கிழக்கு, மயிலிட்டித்துறை தெற்கு, மயிலிட்டித்துறை வடக்கு,

பலாலி தெற்கு,பலாலி கிழக்கு, பலாலி வடக்கு, பலாலி வடமேற்கு, பலாலி மேற்கு, ஆகிய 36 கிராமசேவையாளர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்கூறிய நிபந்தனைகளுக்கு அமைவாக மீள் குடியேற்றத்திற்கு சம்மதம் தெரிவிக்கும் குடும்பங்கள் யாழ்.மாவட்டத்தினுள் வசிப்பவர்களாயின் இன்றுவரை தகவல்களை தாங்கள் வதியும் பிரதேச செயலர்கள் கூடாக அறிவிக்காதவர்கள், விபரங்களை நேரடியாக தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு அறிவிக்குமாறும்,

யாழ்.மாவட்டத்திற்கு வெளியே வதியும் குடும்பங்கள் தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு 23.06.2007 முன் விபரங்களை அனுப்பிவைக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றார்கள்.

பிரதம குடியிருப்பாளர் பெயர், அங்கத்தவர் எண்ணிக்கை, இடம் பெயர்வின் போது குடியிருந்த கிராம சேவையாளர் பிரிவும் விலாசமும், தற்போதைய வதியும் விலாசம் ஆகிய விபரங்கள் அனுப்பிவைக்கவேண்டும்.

மேலதிக விபரங்களை தெல்லிப்பழை பிரதேச செயலக தொலைபேசி இலக்கம் 021 222 3952 அல்லது தொலை நகல் இலக்கம் 021 222 3952 அல்லது மின்னஞ்சல் முகவரி (dsthellipalai@ Sltnet.lk) யில் பெறலாம் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.